

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.11.2024) தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை (TNCF) நிதியிலிருந்து, வாள்வீச்சு வீராங்கனை செல்வி பி. சசிபிரபா தென்கொரிய நாட்டில் நடைபெற உள்ள சர்வதேச அளவிலான வாள் வீச்சு விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்வதற்கு, போட்டிக்கான நுழைவுக் கட்டணம் மற்றும் போட்டியில் கலந்து கொள்வதற்கு செலவினத் தொகையாக ரூ.2,00,000/-க்கான காசோலையினை வழங்கினார். உடன் இளைஞர் நவன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, ஆகியோர் உள்ளனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.11.2024) எகிப்து நாட்டில் நடைபெறும் சர்வதேச பாரா பேட்மின்டன் போட்டியில் கலந்துகொள்ளவுள்ள ஜெகதீஷ்டில்லிக்கு, நுழைவுக் கட்டணம் உட்பட செலவினத் தொகை ரூ.1,79,000/-க்கான காசோலையினை தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து வழங்கினார். உடன் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி ஆகியோர் உள்ளனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.11.2024) தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை (TNCF) நிதியிலிருந்து வருகிற 01.12.2024 முதல் 08.12.2024 வரை மலேசியாவில் நடைபெறவுள்ள 10வது ஆசிய பசிபிக் காது கேளாதோர்களுக்கான விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்ளும் வீரர், வீராங்கனைகளுக்கு போட்டியில் கலந்து கொள்வதற்கு செலவினத் தொகையாக ரூ.2,20,000/க்கான காசோலையினை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, சங்க நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று (16.11.2024) சென்னை எழும்பூர், மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கில் நடைபெற்ற 14-வது ஹாக்கி இந்தியா சீனியர் ஆண்கள் தேசிய சாம்பியன்ஷிப் 2024 இறுதிப் போட்டியில் வெற்றி பெற்ற ஒடிசா அணி வீரர்களுக்கு தங்க பதக்கத்தை அணிவித்து, கோப்பையை வழங்கினார். இவ்விழாவில் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, ஹாக்கி இந்தியா தலைவர் திலீப் டிர்கி, ஹாக்கி இந்தியா பொருளாளர் மற்றும் தமிழ்நாடு ஹாக்கி சங்கத்தின் தலைவர் சேகர் மனோகரன், பொதுச் செயலாளர் முனைவர் செந்தில் ராஜ்குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியின் கீழ் 13 விளையாட்டு வீரர்-வீராங்கனைகளுக்கு

# வெளிநாடு போட்டிகளில் பங்கேற்க நுழைவுக் கட்டணம் - தங்குமிட செலவுகளுக்கு ரூ.5,99,184 காசோலை!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, நவ.17

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் டி.என் சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியின் கீழ், 13 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு வெளிநாடுகளில் நடைபெற உள்ள போட்டிகளில் பங்கேற்பதற்காக, போட்டிகளுக்கான நுழைவுக்கட்டணம், பயணம் மற்றும் தங்குமிட செலவுகளுக்காக மொத்தம் ரூ.5,99,184-க்கான காசோலைகளை வழங்கினார்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.11.2024) டி.என் சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியின் கீழ், 13 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு வெளிநாடுகளில் நடைபெற உள்ள போட்டிகளில் பங்கேற்பதற்காக போட்டிகளுக்கான நுழைவுக்கட்டணம், பயணம் மற்றும் தங்குமிட செலவுகளுக்காக மொத்தம் ரூ.5,99,184-க்கான காசோலைகளை வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டு விளையாட்டு வீரர், வீராங்கனைகள் வெளிநாடுகளில் நடைபெறுகின்ற போட்டிகளில் பங்கேற்கும் செலவுகளை மேற்கொள்ள இயலாமையால், போட்டிகளில் பங்கேற்க முடியாமல் தவிக்கின்ற சூழலை மாற்றிட, தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையை உருவாக்கி, அதன் மூலமாக வெளிநாடுகளில் பங்கேற்க வாய்ப்பு கிடைத்த விளையாட்டு வீரர், வீராங்கனைளுக்கு அந்த போட்டிகளில் பங்கேற்றிட, போட்டிகளுக்கான நுழைவுக்கட்டணம், பயணம் மற்றும் தங்குமிட செலவுகளுக்கான நிதியினை வழங்க உத்தரவிட்டுள்ளார்.

இதுவரை சொந்த செலவிலும், தனியார் நிறுவனங்கள், மற்றும் அமைப்புகளின் நிதியுதவியிலும் மட்டுமே போட்டிகளில் பங்கேற்று வந்த தமிழ்நாட்டின் விளையாட்டு வீரர், வீராங்கனைகள், தற்போது பல்வேறு வெளிநாட்டு போட்டிகளில் எளிதாக கலந்து கொள்ள கிடைத்த வாய்ப்பின் காரணமாக, தங்கள் திறமையை வெளிப்படுத்தி, பதக்கங்கள் வென்று திரும்பும் நிலை உருவாகியுள்ளது.

அதனடிப்படையில், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 2024-ஆம் ஆண்டு வருகின்ற 01.12.2024 முதல் 08.12.2024 வரை மலேசியாவில் உள்ள கோலாலம்பூரில் நடைபெறவுள்ள 10வது ஆசிய பசிபிக் காது கேளாதோர்களுக்கான விளையாட்டுப் போட்டியில் கலந்துக் கொள்ள உள்ள 11 விளையாட்டு வீரர் / வீராங்கனைகளுக்கு போட்டிக்கான மொத்தத் தொகை ரூ.2,20,000/க்கான காசோலையை வழங்கினார்.

தென்கொரிய நாட்டில் நடைபெற உள்ள சர்வதேச அளவிலான வாள் வீச்சு விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்ள உள்ள வாள்வீச்சு வீராங்கனை செல்வி. பி. சசிபிரபா அவர்களுக்கு விமான கட்டணம், தங்கும் இடம் செலவினம் மற்றும் போட்டிக்கான நுழைவு கட்டணத்திற்கான தொகை ரூ. 2,00,000/ க்கான காசோலையையும் வழங்கினார்.

தொடர்ந்து எகிப்து நாட்டில் நடைபெறும் சர்வதேச அளவிலான பாரா பேட்மிட்டன் போட்டிகளில் கலந்துகொள்ள பாரா பேட்மிட்டன் விளையாட்டு வீரர் ஜெகதீஸ்டில்லி, அவர்களுக்கு சென்று வருவதற்கான விமான கட்டணம், தங்கும் இடம் செலவினம் மற்றும் போட்டிக்கான நுழைவு கட்டணத்திற்கான தொகை ரூ.1,79,184/ க்கான காசோலை என இன்று மொத்தம் 13 விளையாட்டு வீரர், வீராங்கனைளுக்கு மொத்தம் ரூ.5,99,184/க்கான காசோலைகளை "TN Champions Foundation" அறக்கட்டளை நிதியில் இருந்து தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, சங்க நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### 14வது ஹாக்கி இந்தியா சீனியர் ஆண்கள் தேசிய சாம்பியன் ஷிப் 2024

# இறுதிப் போட்டியில் வெற்றி பெற்ற ஒடிசா அணி வீரர்களுக்கு தங்கப்பதக்கம் - கோப்பை!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, நவ.17-

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 14-வது ஹாக்கி இந்தியா சீனியர் ஆண்கள் தேசிய சாம்பியன்ஷிப் - 2024 இறுதி போட்டியில் வெற்றி பெற்ற ஒடிசா அணி வீரர்களுக்கு தங்க பதக்கத்தை அணிவித்து, கோப்பையை வழங்கினார்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.11.2024) சென்னை எழும்பூர், மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கில் நடைபெற்ற 14 வது ஹாக்கி இந்தியா சீனியர் ஆண்கள் தேசிய சாம்பியன்ஷிப் - 2024 இறுதி போட்டியில் வெற்றி பெற்ற ஒடிசா அணி வீரர்களுக்கு தங்க பதக்கத்தை அணிவித்து, கோப்பையை வழங்கினார்.

இந்த போட்டிகளில் இரண்டாம் இடம் பிடித்த ஹரியான அணி வீரர்களுக்கு வெள்ளி பதக்கம் அணிவிக்கப்பட்டு, கோப்பை வழங்கப்பட்டது. மூன்றாம் இடம் பிடித்த உத்தரபிரதேசம் அணி வீரர்களுக்கு வெண்கலப் பதக்கம் அணிவிக்கப்பட்டு, கோப்பை வழங்கப்பட்டது. 14வது ஹாக்கி இந்தியா சீனியர் ஆண்கள் தேசிய சாம்பியன்ஷிப் 2024 போட்டிகள், தமிழ்நாடு ஹாக்கி சங்கத்தின் சார்பாக நவம்பர் 4ந் தேதி முதல் 16ஆம் தேதி வரை சென்னை எழும்பூரில் உள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின், மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டு அரங்கத்தில் சிறப்பாக நடைபெற்றது. இதில் 29 மாநிலங்களைச் சேர்ந்த அணிகள் கலந்து கொண்டனர். நவம்பர் 2023 இல் தமிழ்நாடு ஹாக்கி சங்கம் 13வது ஹாக்கி இந்தியா சீனியர் ஆண்கள் தேசிய சாம்பியன்ஷிப் போட்டியை நடத்தியது. அதனை தொடர்ந்து, இந்த ஆண்டும், தமிழ்நாடு ஹாக்கி சங்கம் 2வது முறையாக சீனியர் ஆண்கள் தேசிய சாம்பியன்ஷிப் போட்டிகளை வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளது.

இந்த சாம்பியன்ஷிப் போட்டிகளின்போது, வருங்கால இந்திய அணிக்கான இளம் வீரர்களை தேர்வு செய்ய ஹாக்கி இந்தியா தலைமை பயிற்சியாளர் கிரேக் ஃபுல்டன் மற்றும் தேர்வுக் குழுவினர்கள் கலந்து கொண்டனர். நடைபெறவிருக்கும் ஐரோப்பா சுற்றுப்பயண போட்டியில் இந்திய சீனியர் ஆண்கள் அணியில் பங்கேற்கும் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஹாக்கி வீரர் கார்த்தி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இவ்விழாவில் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, ஹாக்கி இந்தியா தலைவர் திலீப் டிர்கி, ஹாக்கி இந்தியா பொருளாளர் மற்றும் தமிழ்நாடு ஹாக்கி சங்கத்தின் தலைவர் சேகர் மனோகரன், பொதுச் செயலாளர் முனைவர் செந்தில் ராஜ்குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு பெரம்பலூர் மாவட்டம், கிருஷ்ணாபுரம், பூலாம்பாடி, கள்ளப்பட்டி சாலை இடை வழித்தடத்திலிருந்து இருவழித்தடமாக அகலப்படுத்தி வலுப்படுத்தி அமைக்கப்பட்டுள்ள சாலையின் தரம் குறித்து திடீர் ஆய்வு செய்தார். அப்போது மாவட்ட ஆட்சியர் கிரேஸ் பச்சாவ், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் கார்த்திகேயன், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், நெடுஞ்சாலைத்துறை தொழில்நுட்ப சிறப்பு அலுவலர் சந்திரசேகர், தலைமை பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) சத்திய பிரகாஷ், கண்காணிப்பு பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) விழுப்புரம் செந்தில்குமார், செந்தில், கலைவாணி, திருவருள், பா.துரைசாமி, இரா.ப.பரமேஷ்குமார், சன்.சம்பத், எஸ்.நல்லதம்பி, க.ராமலிங்கம் மற்றும் எஸ்.அழகுவேல்,ரா.சிவா ஆகியோர் உடனிருந்தனர்.

### பார்வைத்திறன் குறைபாடுள்ள ஏழைகளுக்கு

# இலவச அறுவை சிகிச்சை செய்ய சன் டி.வி. ரூ.75 லட்சம் நிதி உதவி !



**சென்னை, நவ.17-**

**கண் அழுத்த நோய் உள்ளிட்ட பார்வைத்திறன் குறைபாடுள்ள ஏழைகளுக்கு இலவச அறுவை சிகிச்சை செய்வதற்காக சன் டி.வி. ரூ.75 லட்சம் நிதி உதவி அளித்துள்ளது. முன்னாள் மத்திய அமைச்சர் முரசொலி மாறன் நினைவாக, ஏழை எளியோரின் கல்வி, மருத்துவச் சிகிச்சை, சமூக மேம்பாடு உள்ளிட்ட நலத் திட்டங்களுக்காக சன் பவுண்டேஷன் மற்றும் சன் டி.வி. பல்வேறு அமைப்புகளுக்கு நிதி உதவி வழங்கி வருகின்றன.**

அதன் ஒரு பகுதியாக, பார்வை திறன் குறைபாடுகளால் பாதிக்கப்பட்ட ஏழைகளுக்கு இலவசமாக அறுவை சிகிச்சை மேற்கொள்ள சென்னை அகர்வால் கண் மருத்துவமனைக்கு சன் டி.வி. 75 லட்சம் ரூபாய் நிதி உதவி அளித்துள்ளது. இதற்கான காசோலையை அகர்வால் கண் மருத்துவமனை நிர்வாகிகள் டாக்டர்கள் சவுந்தரி, சுதா, திரிவேணி ஆகியோரிடம் சன் டி.வி. சார்பில் மல்லிகா மாறன், காவேரி கலாநிதி மாறன் வழங்கினர். இந்த நிதியின் மூலம் ஏழைகளுக்கு இலவச சிகிச்சை மேற்கொள்ளப்படும் என்று அகர்வால் கண் மருத்துவமனை மண்டல மருத்துவ இயக்குனர் டாக்டர் சவுந்தரி தெரிவித்தார். ஏழை எளியோருக்கு கல்வி, அடிப்படை கட்டமைப்புகள் மற்றும் கற்றல் சூழலை மேம்படுத்துதல், தரமான இலவச சிகிச்சை, மகளிர் மற்றும் இளைஞர் நலன், கிராமப்புற மேம்பாடு உள்ளிட்ட நலத்திட்டங்களை செயல்படுத்துவதற்காக சன் டி.வி.யும், சன் பவுண்டேஷனும் தொடர்ந்து நிதி உதவி அளித்து வருகின்றன.

சன் டி.வி. மற்றும் சன் பவுண்டேஷன் இதுவரை அளித்த நிதி உதவிகள் மூலம் அகர்வால் கண் மருத்துவமனையில் 8,603 பேருக்கு இலவசமாக அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.